# 22,000 வங்கி ஊழியர் வேலை நிறுத்த முஸ்தீபு

(கொழும்பு)

22 ஆயிரம் வங்கி ஊழியர் [illegible] தனியார் மய [illegible] எதிர்ப்பு தெரிவித்து வேலை நிறுத்தத்தில் குதிக்கவுள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 11 இதழ் 13
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 23 — 02 — 1992

## தனியார் மயமாக்க அரசு பொய்யான தகவல்

(கொழும்பு)

வங்கிகளை தனியார் மயமாக்கும் நோக்கத்துடன் அரசு பொய்யான தகவல் [illegible] வங்கி சேவையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## வங்கிகளுக்கு ஏற்பட்ட அறவிடமுடியா கடன்

(கொழும்பு)

[illegible] வங்கி, இலங்கை வங்கிகளில் கடன் பெற்றவர் [illegible] ஜனாதிபதி [illegible] அமைச்சர்களின் நெருங்கிய உறவினர்கள் [illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் பாதுகாப்பில்லை

# 3,500 அகதிகள் மன்னர் திரும்ப மறுப்பு

(சென்னை)

இலங்கையில் தமக்கு பாதுகாப்பு இல்லையென்பதனை காரணம் காட்டி தமிழகத்திலிருந்து மன்னார் திரும்புவதற்கு ஏற்கனவே விருப்பம் தெரிவித்தவர்களில் 3,500 அகதிகள் இலங்கை திரும்புவதற்கு மறுப்பு தெரிவித்துள்ளனர்.

இந்தியாவிலுள்ள இரண்டு லட்சத்து முப்பதாயிரம் அகதிகளில் பத்தாயிரம்பேர் மட்டும் மன்னார் திரும்ப விருப்பம் தெரிவித்திருந்தனர். இலங்கை அரசு ஏற்கனவே அறிவித்தபடி காலகம் திரும்பிய அகதிகளுக்கு பாதுகாப்பு அளிக்கவில்லை என்பதனால் 3,500 பேர் மீண்டும் மன்னார் திரும்ப மறுப்பு தெரிவித்துள்

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாமீது எந்நேரமும் தாக்குதல் ஆரம்பமாகலாம்

(கொழும்பு)

யாழ். குடா நாட்டின் மீது [illegible] இந்த இராணுவ நடவடிக்கை [illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

# திருமலையில் ராணுவத்தினரால் 5 தமிழர் சுட்டுக்கொலை

(திருமலை)

திருகோணமலையில் கடந்த மூன்று தினங்களில் ஐந்து தமிழர்கள் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இரு பெண்கள் உட்பட அறுவர் இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

மூதூரிலுள்ள இருதயபுரம் என்ற இடத்தில் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டினால் ந. இன்பராஜ், இன்னியா, எஸ். லோகேஸ்வரன், வ. இராஜா, த. சத்தியசீலன், செ. பாக்கியராஜ் ஆகியோர் பலியானார்கள்.

சுசிலா (22-வயது - ஆலடி) லேணி என்ற இளம் யுவதி இராணுவத்தினரால் [illegible]

[4ம் பக்கம் பார்க்க]

## மட்டு. அரச ஊழியர் இரு நாட்கள் தடுத்துவைப்பு

(மட்டுநகர்)

மட்டு. நகருக்கு உத்தியோக நிமித்தம் சென்ற அரச ஊழியர்கள் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டனர். [illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

## விசேட திட்டமூலம் பட்டதாரிகளுக்கு வேலை

(கொழும்பு)

பல்கலைக் கழகப் படிப்பை முடித்து வெளியேறும் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க விசேட திட்டம் தயாரிக்கப்படுவதாக ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக ஆயிரம் பட்டதாரிகள் வெளியேறும் போது அவர்களுக்கு ஆசிரிய பதவி வழங்க ஒழுங்கு செய்யப்படும்.

மகாபொல புலமைப் பரிசில் பெறுவோரில் தொகையும் அதிகரிக்கப்படவுள்ளன என்றும் அவர் மேலும் தெரி

(4-ம் பக்கம் பார்க்க)

## வனசிங்கா, கொப்பேகடுவ வவுனியா விஜயம்

(கொழும்பு)

கூட்டுப்படைத் தளபதி லெப். ஜெனரல் வனசிங்க, வடபிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ ஆகியோர் அநுராதபுரம், மதவாச்சி, வவுனியா ஆகிய பகுதிகளுக்கு [illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

# 'தமிழர் அந்நியப்பட்டால் தீவிரவாதத்தை தழுவுவர்'' ஜனாதிபதி பிரேமா

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதி வாழ் தமிழ் மக்கள் அந்நியப் படுத்தப்பட்டால் அவர்கள் தீவிரவாதத்தைத் தழுவும் சூழ்நிலைகள் ஏற்படக்கூடும் இவ்வாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

கடவத்த கனேமுல்ல அமரபுர விகாரையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேவமகா அமர வம்ச தேரோவின் முன்னுவது ஞாபகார்த்தக் கூட்டத்தில் ஜனாதிபதி பிரேமதாசா உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

இந்த நாட்டில் சமாதானத்தையும் ஒழுங்கையும் ஒற்றுமையையும் நிலைநாட்டுவதற்கு உரிய தீர்மானத்துடன் எவரும் நடவடிக்கைமேற்கொள்ள முடியுமென்றார் (ம)

## ஜே. வி. பி. விண்ணப்பம்

(லண்டன்)

ஜனதா விமுக்தி பெரமுன கட்சி (ஜே. வி. பி.) இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியாக பதிவுசெய்வதற்கு தேர்தல் ஆணையாளரிடம் விண்ணப்பத்தை அனுப்பியுள்ளதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக லண்டன்

(4-ம் பக்கம் பார்க்க)

## தலைமன்னார் வந்துசேர்ந்த 129 அகதி குடும்பங்கள்

(மன்னார்)

இலங்கைத் தமிழ் அகதிகளைக் கொண்ட 129 குடும்பங்கள் நேற்று இராமேஸ்வரத்திலிருந்து "எம். வி. இராமானுஜம்'' என்ற கப்பலில் புறப்பட்டு தலைமன்னார் வந்து சேர்ந்தனர். இவர்களில் மொத்தம் 511 பேர் அடங்குவர்.

இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னார் வந்த முதலாவது குழு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே ஐந்து அணிகள் சென்னையிலிருந்து திருகோணமலைக்கு வந்து சேர்ந்தது தெரிந்ததே. (வே)

## 8,000 இலங்கையருக்கு ஐரோப்பாவில் சிறை!

(கொழும்பு)

8,000 இலங்கையர் ஐரோப்பிய நாடுகளில் சிறைத்தண்டனை அனுபவிப்பதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

ஹெரோயின் போதைவஸ்து கடத்தல் மற்றும் பாவனை சம்பந்தமாகவே இவர்கள் சிறைத் தண்டனை அனுபவித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ம)

## 500 ரூபா கள்ள நோட்டுகள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

500ரூபா கள்ள நோட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக நிதியமைச்சர் ரணில்விக்கிரமசிங்க கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; கள்ள நோட்டில் உள்ள பாதுகாப்புக் குறியீடுகள் தெளிவாக இல்லையென்றும், அதற்கு உள்ள இலக்கங்கள் உண்மையான நோட்டில் உள்ள இலக்கங்களைவிடச் சிறியனவாக உள்ளதாகவும் இவ்விடயம் தொடர்பாக புலன்விசாரணைகள் துரிதகதி

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### குழந்தைகள் வைத்தியம்

நிவசாயகிரம் குழந்தைகள் வைத்தியசாலை கல்லியங்காட்டிலிருந்து 1 மைல்தொலைவிலுள்ள இருபாலை சந்தியிலும் K. K. S. வீதி மனோகரா சந்திக்கு அருகாமையிலும் இயங்கும். (இ5990)

### PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத் தன்மைகளுக்கு மான 9 வகை மூலிகை அடங்கியது. கிடைக்குமிடம்; எஸ்.கே. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். (இ-5993)

### கல்வி

G, C, E. (O/L)ல் கணிதபாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 25 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலத்திற்குள் அதி உயர் விஷேட நுட்பத்துடன் கற்பிக்கப்படும்; மற்றும் A/L வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படும்; ஆறுமுகநாதன், 10, கச்சேரி நல்லூர் ஒழுங்கை, சோமசுந்தர வீதி, சுண்டிக்குளி; (இ-5991)

### விருத்தாள் (ஆண்டு 5, 4)

தலைமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் ஆண்டு 5 23-02-92 ஞாயிறும் ஆண்டு 4 01-3-92 ஞாயிறும் வெளியிடப்படும். பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும்; புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-6002)

### பதவி உயர்வு

யாழ்ப்பாணம்;

யாழ். மாவட்ட புள்ளிவிபர உத்தியோகத்தர் திரு. அ. விஜயலிங்கம் மாவட்ட புள்ளிவிபரவியலாளர் பதவிக்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (மா)

### விற்பனைக்கு

கைத்தறியில் செய்யப்பட்ட கிறே வேட்டி, சாரம், கிறேபப்ளின், சேலை, துவாய், பெட்சீற் என்பன விற்பனைக்கு உண்டு. 10, 2/30°, 50 இலக்க கைத்தறி நூல் வகைகளும் எமது சங்க அங்கத்தவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், இருபாலை வீதி, கோண்டாவில்; (இ-5997)

### கோழிகளுக்கு தூக்கநோய்

(மானிப்பாய்)

நவாலி ஆனைக்கோட்டை பகுதிகளில் கோழிகளுக்கு தூக்கநோய் ஏற்பட்டுள்ளது. இந்நோய் ஆரம்பமாகி இரு தினங்களில் கோழிகள் திடீரென இறப்பதாக தெரிவிக்கப்படுகிறது; (71)

## தேங்காய்க்குள் பெற்றோல்; கடத்தமுற்பட்டவர் கைது

(கொழும்பு)

தேங்காய்களுக்குள் மறைத்து பெற்றோல் கடத்த முற்பட்ட தமிழர் ஒருவர் வவுனியா தாண்டிக்குளம் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வவுனியாவிலிருந்து நான்கு டிக்குளம் ஊடாக 45 தேங்காய்களுக்குள் சுமார் 20 லீட்டர் பெற்றோல் கடத்தமுயன்ற போதே மேற்படி நபர் கைது செய்யப்பட்டதாகவும் மேல் விசாரணைக்காக இவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (க)

## எய்ட்ஸ் பற்றி
# தகவல் தர மறுப்போருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம்

(கொழும்பு)

"எய்ட்ஸ்" நோய் தமக்கிருந்தால் அதுபற்றிய தகவல் கொடுக்க மறுப்பவர்களுக்கு ஆகக்கூடிய குற்றப்பணமாக 50 ஆயிரம் ரூபா அறவிடப்படுமென அமைச்சரவை பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்;

எய்ட்ஸ் நோய் பரவுவதை தடுக்கும் வகையில் கட்டாய எய்ட்ஸ் பரிசோதனை சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இச்சட்டத்தின்கீழ் ஆய்வு கூடங்கள் பதிவுபெற்று, எய்ட்ஸ் இலவச வைத்திய அத்தாட்சிப்பத்திரம் விநியோகிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## "போட்டிகளில் அனுபவம் வாய்ந்த மத்தியஸ்தர் அவசியம்"

(உடுவில்)


"நல்ல போட்டிக் குழுக்களை பங்குபற்றும் விளையாட்டு உடற்பயிற்சிப் போட்டிகளுக்கு அனுபவம் வாய்ந்த மத்தியஸ்தர்களை கல்வித் திணைக்கள விளையாட்டுத் துறை அதிகாரிகள் நியமிக்க வேண்டும்."

கன்னாகம் சொக்கனி பாடசாலை உடற்பயிற்சி போட்டிகளுக்கு மத்தியஸ்தம் வகித்த இளைப்பாறிய சிரேஷ்ட உடற்பயிற்சி போதனாசிரியர் திரு. தம்பித்துரை இவ்வாறு கூறினார்.

அதிபர் பி. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டிகளில் யாழ்ப்பாண கல்வித் திணைக்கள உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. பொ. நாகமணி கலந்து கொண்டு உரையாற்றிய போது கூறியதாவது;

கல்விக்கு அணிகலனாக விளையாட்டுக்கள் அமைய வேண்டுமே தவிர கல்வி நேரத்தை குறைத்து விளையாட்டுப்பயிற்சி களில் ஈடுபடக்கூடாது. விளையாட்டுப்போட்டி விதிமுறைகளை உடற்பயிற்சி ஆசிரியர்கள் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். (109)

### நான்காவது ஆண்டு
# நினைவஞ்சலி



**அமரர் திருமதி அ. செல்வபூமணி**

பிறப்பு: 18-11-1921 இறப்பு: 23-02-1988

ஷஷ்டி திதி: மாசி 11 ஞாயிறு (23-02-92)

அன்பின் உருவாய்<br>
அறிவின் உறைவிடமாய்<br>
பண்பின் சிகரமாய்<br>
பாசத்தின் இமயமாய்<br>
திகழ்ந்த எம் குலவிளக்கே!<br>
ஆண்டுகள் எத்தனை சென்றாலும்<br>
மாறாது மறையாது<br>
உன் நினைவுகளை மறக்கவும் முடியாது!

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:

S. R. அரியரட்ணம் (கணவர்)<br>
(ஓய்வுபெற்ற அதிபர்)<br>
பிள்ளைகள், மருமகள், பேரப்பிள்ளைகள்.

உடுவில். (இ-5975)

## இராசி பலன்

23/2/1992

ஞாயிற்றுக்கிழமை<br>
தமிழுக்கு மாசி 11.

ஷஷ்டி காலை 6. 07 வரை; சுவாதி பி. இ: 12. 46 வரை சித்தயோகம், இராகுகாலம் மாலை 5. 01 வரை 6. 31வரை சுபநேரம் காலை 9. 31 முதல் 11; 01 வரை.

மேடம்:- காரிய ஜயம், மதிப்பு, மனத்தைரியம்.

இடபம்:- இன்பம் மகிழ்ச்சி புதியவிதாயனம், வெகுமதி.

மிதுனம்:- எதிர்பாராத தன்யம், முயற்சிக்கால், பண முடை.

கடகம்:- வழியில் இடையூறு. மனசஞ்சலம், காரியதடை.

சிங்கம்:- நண்பர் வருகை, விருந்துபசாரம், உல்லாச பயணம்.

கன்னி:- ஏமாற்றம், கடித தொல்லை, பழைய நினைவுகள்.

துலாம்:- பந்துமித்திரர் உதவி, காரியவெற்றி, புகழ்.

விருச்சிகம்:- மகிழ்ச்சிக் குறைவு, புத்திரபுத்தி, தானதர்மம்.

தனுசு:- வீண்விவாதம், கண்ணியக்குறைவு, விரோதம்.

மகரம்:- புதியசிந்தனை, குழந்தைப்பாசம். பொதுத்துறை ஈடுபாடு;

கும்பம்:- மனப்போராட்டம், வாழ்க்கைப்பிரச்சினை; தொல்லை.

மீனம்:- கைப்பொருள் இழப்பு, கவலையான தூக்கம். மனச்சுமை.

- ஜோதிடன்

### இன்று உதைபந்தாட்ட அரையிறுதியாட்டம்

(யாழ்ப்பாணம்)

தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் அவையின் ஆதரவில் விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்டுவந்த உதைபந்தாட்டப் போட்டியின் அரை இறுதியாட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ் அரை இறுதி ஆட்டங்களின் முதல் போட்டியில் சென். மேரிஸ் கழகத்தை எதிர்த்து சென். றொக்ஸ் கழகமும் 2வது ஆட்டத்தில் பாடுமீன் [illegible] கழகத்தை எதிர்த்து திருமலை நட்சத்திர கழகமும் மோதும்; இவ்விரு ஆட்டங்களுக்கும் முன் இருஸ் கொப்பன் [illegible] கழகத்துக்கும் ஷீரு அணிக்குமிடையில் ஒரு காட்சிப் போட்டியும் நடைபெறும். (வி)

### தற்காலிக பாடசாலை

(யாழ்ப்பாணம்)

கொற்பலியில் குடியிருப்புள்ள திவகத்திலிருந்து இடம்பெயர்ந்த 544 குடும்பங்களின் பிள்ளைகளின் கல்விவசதி கருதி எதிர்வரும் மார்ச் மாதம் 04ந் திகதி தற்காலிக பாடசாலை கொற்பலியில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது;

இப்பாடசாலையில் ஒரு அதிபரும் ஐந்து ஆசிரியர்களும் கடமையாற்றுவார்கள் இதற்கான நடவடிக்கைகளில் கல்வித்திணைக்களம் ஈடுபட்டுவருகிறது. (மா)

### ஆங்கிலப் போட்டிகள்

(கொடிகாமம்)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தின் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே ஆங்கிலப் போட்டிகளை நடாத்தவுள்ளனர்.

மாணவர்கள் மத்தியில் ஆங்கில அறிவை விருத்தியாக்கும் நோக்குடன் ஆங்கில எழுத்துக்கூட்டல் போட்டி, ஆங்கில சொற்களை வாசனம் போட்டி, ஆங்கில மொழி மூலம் பொதறிவுப் போட்டி முதலான பல போட்டிகளை இரண்டாம் தவணை ஆரம்பத்தில் நடாத்துவதற்கு பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். கணேசவேல் திட்டமிட்டுள்ளார்.

இப்போட்டிகள் சம்பந்தமான சுற்றறிக்கை ஒன்று வெகுவிரைவில் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது; (139)


பாடசாலை மாணவர்களின் பாட நூல்கள்; பாடசாலை உபகரணங்கள், மற்றும் பொருட்களையும், அலுவலக உபகரணங்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.

(வியாபாரிகளுக்கு விஷேட கழிவு — மாணவர்களுக்கு விஷேட சலுகை)

# 'சோபிதா' புத்தகசாலை

363, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(சி-6008)

